**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C.407/2024**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 11.09.2025.**

| | |
|---|---|
| **Name : மாதுராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வில் உள்ளேன். கடந்த 2024ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 05.01.2024–ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சீனிவாசன் என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த ராஜாத்தி, க/பெ.பழனிசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என் வசம் ஒப்படைத்தார். அதனை பெற்ற நான் மனு ரசீது எண்.4/2024 என்ற எண்ணில் கடந்த 05.01.2024ம் தேதி மதியம் 12.00 மணிக்கு பதிவு செய்து விசாரணை செய்து பின்னர் கடந்த 28.01.2024ம் தேதி மாலை 4 மணிக்கு விசாரணை அடிப்படையில், புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.15/2025 u/Sec 294(பி), 324, 506(1) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். மனு ரசீது **அ.சா.ஆ.6** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

3. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 28.01.2024ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு சம்பவ இடம் தோரமங்கலம் கிராமம்,

காப்பரத்தாம்பட்டி, மேட்டுகாடு சென்று சாட்சிகள் சுப்பிரமணி மற்றும் கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.8** மற்றும் **அ.சா.ஆ 9** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் சுப்பிரமணி, ராஜாத்தி, பழனிசாமி, அங்கம்மாள், சாந்தி, தேவகி, கண்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த ராஜாத்தி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கணேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். அவரை விசாரித்த போது ராஜாத்தி என்பவருக்கு ஏற்பட்ட காயத்தில் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக கருத்துரை வழங்கினார். இவ்வழக்கில் மருத்துவர் கருத்துரைக்கு பின்னர் சாட்சி ராஜாத்தி என்பவரை மறுவிசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கடந்த 28.01.2024 ம் தேதி 18.00 மணிக்கு வாதியின் வீட்டிற்கு அருகில் உள்ள தண்ணீர் தொட்டி அருகே சுமார் 85 செ.மீ நீளமுள்ள மரக்கட்டை ஒன்று கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக சாட்சிகள் சுப்பிரமணி மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டு பின்னர் படிவம் 95ன் வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ–10** ஆகும். படிவம் 95 **அ.சா.ஆ.11** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரி பெண் என்பதால் கடந்த 31.01.2024 ம் தேதி 10.00 மணி சுமாருக்கு காவல் நிலையத்தில் ஆஜராக கு.வி.மு.ச பிரிவு 41(ஏ)ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டு கைது தேவையில்லை என்பதால் எதிரியை கைதுக்கு உட்படுத்தவில்லை. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை அடிப்படையில் எதிரி கௌசல்யா என்பவரை இவ்வழக்கில் சம்மந்தப்படவில்லை என்பதால் எதிரி நீக்கல் அறிக்கை வாயிலாக நீக்கப்பட்டது. எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 31.01.2024 ம் தேதி **நி.கு.எண்.15/2025**

**u/Sec 294(பி), 324, 506(1) IPC லிருந்து u/Sec 294(பி), 326 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.13** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. இந்த வழக்கின் புகார்தாரருக்கு எங்கு அடிப்பட்டதாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் இடது கை, இடது காலில் அடிப்பட்டதாக தெரிந்து கொண்டேன். என்னுடைய விசாரணையில் புகார்தாரர் அவருக்கு இடது கை பெருவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 தேவகி என்பவரை என்று எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரணை செய்தேன்.

8. என் விசாரணையில் மருத்துவமனையில் விசாரித்ததாக சொல்லவில்லை என்றால் ஆமாம். அங்கம்மாள், சுப்பிரமணி, கண்ணன், சாந்தி ஆகிய சாட்சிகளை நான் விசாரிக்காத காரணத்தினால் தான் நீதிமன்றத்தில் தங்களுக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்று கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சுப்பிரமணி, கண்ணன் இரு சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைப்படம், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை அதனால் தான் நீதிமன்றத்தில் அவர்கள் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

9. இவ்வழக்கின் புகார்தாரர் வீட்டில் நாய் வளர்ப்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் புகார்தாரர் அந்த பகுதியில் அடிக்கடி தகராறு செய்யும் விவரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ராஜாத்தி அந்த பகுதியில் உள்ள மக்கள் யாருடனும் அவர் சகஜமாக இருக்கமாட்டார் என்றால் சரியல்ல.

10. புகார்தாரருக்கு வெளிக்காயம் ஏற்பட்டதாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அடிப்பட்டதாக தகவல் சொன்னார். வெளிக்காயம் இல்லை. கட்டையால் ஒருவரை தாக்கும் போது கண்டிப்பாக வெளிக்காயம்

ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. அ.சா.1 அவரது நாயை காலையில் சங்கலி போட்டு வெளியே வரும் போது நாய் வேகமாக இழுந்ததில் கீழே விழுந்ததில் அவருக்கு பெரு விரலில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 அவரது புகாரில் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அ.சா.1ன் மீதிருந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரி மீது அவர் தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.